**MCOP NO:945/2025, 1054/2025 (Joint Trial)** **DATE: 03.08.2026**

ம.சா : 1

பெயர் : திரு.மோகேஷ்வர் 945/2025

த/பெ : திரு.ரஜினிகாந்த்

வயது : 20

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 03.08.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் 945/2025 மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 13 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன். (மசாஆ 6 மற்றும் 7 ஆனது 2 ம் எதிர்மனுதாரரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து 14.01.2025 ல் மீனம்பாக்கத்தில் நடந்தது. விபத்து சமயத்தில் நான் R15 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. ஆனால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் எனது ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டது. நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டதா என்றால் உட்படுத்தப்பட்டது. விபத்து குறித்து புகார் யார் கொடுத்தார்கள் என்றால் விபத்தினால் எனக்கு சுயநினைவு இல்லை என்பதால் யார் கொடுத்தார்கள் என்று நேரடியாக எனக்கு தெரியாது. புகார் கொடுத்த உதயகுமார் எனக்கு யார் என்று தெரியாது. விபத்து பதிவேட்டில் எனக்கு ஏற்பட்ட விபத்தானது இருசக்கர வாகனமும், காரும் மோதிக்கொண்டதால் ஏற்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து தேதியில் நான் எனது இருசக்கர வாகனத்தை பல்லாவரத்திலிருந்து மீனம்பாக்கம் நோக்கி இடது புறமாக ஓட்டி சென்றேன். விபத்து ஏற்படுத்திய லாரி எங்கிருந்து வந்தது என்று எனக்கு தெரியாது. ஆனால் அந்த லாரியின் ஓட்டுநர் திடீரென்று என்னை முந்தி செல்லும் போது லாரியின் பின்பக்கமானது என் வாகனத்தின் மீது மோதியதால் எனக்கு இந்த விபத்து ஏற்பட்டது. நான் சென்று கொண்டிருந்த போது வலது புறத்தில் லாரியானது வந்தது. விபத்தானது நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கும் காரிற்கும் இடையே நடந்ததாக காட்டப்பட்டுள்ளதால் 1 ம் எதிர்மனுதாரர் லாரி இந்த விபத்தில்

சம்பந்தப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்ட தெரியாமலும் இருசக்கர வாகனத்தை ஓட்டியதால் தான் எனக்கு இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம்இல்லாமல் வாகனத்தை ஓட்டியதற்காக வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் அபராத தொகை செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. விபத்து தேதியில் இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்தவர் எனது நண்பர் ஆவார். விபத்து ஏற்பட்டவுடன் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சுமார் ஒரு மாதம் எனக்கு வலது காலில் ஏற்பட்ட காயத்தினால் எனது வலது காலானது அறுவை சிகிச்சை மூலமாக எடுக்கப்பட்டு விட்டது. நான் விபத்து தேதியில் பெரி கல்லூரியில் பி.காம் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தேன். எனக்கு கல்லூரி நேரமானது காலை 09.30 மணியிலிருந்து மதியம் 01.30 மணி வரை ஆகும். நான் தற்போது படிப்பை நிறுத்திவிட்டேன். நான் கல்லூரியில் படித்துக்கொண்டே பகுதி நேரமான வேலை பார்த்தேன் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தப்பட்ட குற்ற வழக்கின் நிலை குறித்து எனக்கு தெரியாது. என் மீது இடித்த வாகனமானது எந்த வகையை சார்ந்த லாரி என்று எனக்கு தெரியவில்லை. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் பொருத்தப்பட்ட கேமாராவில் விபத்து நடந்ததற்கான எந்தவித பதிவும் இல்லை என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அதனால் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும், எனக்கு ஏற்பட்ட விபத்திற்கும் சம்பந்தப்படவில்லை என்றும், அதனால் நான் தாக்கல் செய்துள்ள மனுவானது 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்தில் ஈடுபடவில்லை என்பதால் தான் 1ம் எதிர்மனுதாரர் குற்ற வழக்கை வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்தி வருகிறார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. விபத்து என்னுடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது என்றும், வேறு ஒரு காரால் இந்த விபத்து ஏற்பட்டது என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் ஏதேனும் இழப்பீடு பெற வேண்டும் என்றால் காரின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டுதாரரிடம் இருந்து தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

X

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.